www.padippakam.com



# அருவி

# ARUVI

உலகினைப் புரட்டியோர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும்

இதழ் - பத்து
ஜூலை 2001



## தமிழ் காப்போம்

கொஞ்சிடு மழலைத் தமிழுக் கிங்கே
குறைவெனக் கண்டால் கிளர்ச்சி செய்க
வஞ்சகர் தமிழின் சீர் குலைந்தால்
வாளேந்தி வீரமாய் புரட்சி செய்க
தஞ்சமாய் வந்தவர் மொழிக் கலந்தால்
தனித்தமிழ் பேசென்று மிரளச் செய்க
நெஞ்சினில் தழும்புகள் விழுந்திடும் போதிலும்
நேர்த்தியாய் தமிழை வளரச் செய்க

வண்டமிழ் ஆட்சியே வேண்டு மென்று
வன்முறை செய்வதில் தவறொது மில்லை
கண்டனக் குரலை எழுப்பிட வேண்டும்
கன்னித் தமிழின் சீர் குலைப்போர்க்கு
கண்டம் கடந்தும் வாழும் தமிழரே
கடமையாய் தமிழ் பரப்புக
பண்டிதர் பாவலர் போந்தி வந்த
பைந்தமிழ் சீரினை நிதம் விளக்குக

தெலுங்கு கன்னடம் இந்தி எல்லாம்
தேன்தமிழ் சுவைக்கு ஈடாவ தில்லை
மழுங்கிய வாளென சோர்ந் திருந்தால்
மங்கிடும் தமிழின் மாட்சி எல்லாம்
விழும்புண் கண்டு பயந்து விடாதே
வீரத் தழும்பே தமிழரின் மரபாம்
கலங்கிடும் நெஞ்சில் தெளிவு கொண்டு
கறைதனை நீக்கியே தமிழ் காப்பாய் .

நந்தவனம் சந்திரசேகரன்
திருச்சி

படிப்பகம்

www.padippakam.com


# அருவி

# ARUVI

36 Jalan Batu Arang
42000 Pandamaran
Klang
Selangor
Malaysia
Tel : 03 - 31652511





இதழ் - பத்து
ஜூலை 2001



ஆசிரியர் குழுவினர் :

அருண்
கணபதி கணேசன்
வே. சுந்தரராசு
ஏ. தேவராசன்

வெளிநாட்டுப் பொறுப்பாளர்கள் :

வேலணையூர் பொன்னண்ணா - ஜெர்மனி
என்.எஸ். பிரபு - நோர்வே
சந்திர மனோகரன் - தமிழ் நாடு
கரிகால் வளவன் - அந்தமான்



நன்கொடை : ம.ரி 1.50
யு.எஸ் 1.00


படிப்பகம்

www.padippakam.com



# அருவி மலர்ந்துள்ளது...

செய்வோம்...செய்திடுவோம் ...செய்துத்தான் பார்ப்போமே என்ற எண்ண அலைகளோடு தொடங்கப்பட்டதுதான் அருவி. ஓர் இதழை வடிவமைப்பதில் ; அதை வடிப்பதற்கான முயற்சிகள் எவ்வளவு சிரமானது என்பது இப்பொழுதான் தெரிகிறது.

ஒன்பதாவது இதழோடு சற்று சோர்வெய்தியதின் காரணமே இந்தக் கால தாமதம். மீண்டும் முளைத்தெழ ஆறு மாதங்கள் தேவைப்பட்டன. இடையில் அருவி நிறுத்தப்பட்டு விடக்கூடாது என்பதில் முனைப்புக் காட்டி எமக்கு உற்சாகமளித்த நண்பர் பெருமக்கள் யாவருக்கும் நன்றி.

இனி படைப்பாளர்கள் தயவு செய்து தங்களது படைப்புக்களை தவறாமல் மறவாமல் அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அருவியின் முகவரி மாற்றத்தை கருத்தில் கொள்ளவும். மரபுக்கவிதையாளர்கள் மனமுவந்து தங்களது படைப்புக்களை சீர்செய்து அனுப்பிடவும்.



அருவியின் பிறப்பென்பது
ஓர் இலக்கியத் தேடலின் முயற்சியேயன்றி
வேறெதுவுமில்லை.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை ...

படிப்பகம்

www.padippakam.com

# காற்று சுமந்த கருத்து

அன்புமிகு ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்...
அருவி ஒன்பதாவது சிறப்பிதழ் கண்டேன்.
எனது 'எச்சில் பண்ட'த்தை
வெளியிட்டு சிறப்பு செய்தமைக்கு நன்றி.

அக்கரைப் பூக்கள் : முழு நிலவு
மார்டின் லூதர் கிங் : நம்பிக்கை

ஆகிய படைப்பகள் சிறப்பாக உள்ளன.
படைப்பாளர்களுக்கு வாழ்த்துக்கள்.
நண்பர் மகா. மதிவாணனின்
' வறுக்கை ஒர் அலங்காரம் '
' இரு மடல்களும் ஒரு மனதும் '
நெஞ்சையள்ளும் கவிதைகள்.

ஒரு வேண்டுகோள் -
கவிஞர்கள் \ வாசகர்கள் கருத்துகளை
வெளியிடவும். நன்றி.

சந்திரா மனோகரன ஈரோடு தமிழ் நாடு

---

அன்புமிகு நண்பர் அருண் அவர்கட்கு வணக்கம்.
அருவி ஒன்பதாவது இதழ் கிடைத்து . நன்றி.
கவிதையிதழ் எப்படியிருக்க வேண்டுமோ ;
அப்படியே இருக்கிறது அருவி. பல்வேறு சிரமங்கள்
கடந்த அருவி வெளிவருவதாக அறிகிறேன்.
தொடர்க ... வெல்க ... விடிவெள்ளி தூரமில்லை.

கவிப்பேரரசி சாந்தி மியான்மார் பர்மா

---

அருவிக்கு வணக்கம்.
படைப்புகள் யாவும் மிக கவனமுடன் தேர்வு
செய்ததாக இருக்க. இல்லையேல் பழுதுபடாத
இவ்வகை கவிதைகள் கிடைப்பது சிரமம்.
தொடர்ந்து செயலாற்றுக ... செயல்தானே
வாழ்வு.

முல்லை அமுதன் இலண்டன்

---

படிப்பகம்

www.padippakam.com

# சுவடுகளைத் தொலைத்த சுவடு ...



இன்னும் கொஞ்சகாலம்
நீ வாழ்ந்திருக்கலாம் ...
குறைந்தபட்சம்
'எங்கள் சுவடுகளை'
அடையாளம் காட்டும்
வரையாவது வாழ்ந்திருக்கலாம்

வரலாற்றுத்தேடலில் மூழ்கிய நீயே
ஒரு வரலாறாகிவிட்டாய் ...

நீ
கீறிய இரப்பர் மரங்களின்
பாலை சேகரிக்காமல்
ஓடிவிட என்ன அவசரம் ???

எங்கள் ஆதிவேர்
தேடித்தேடி
நீயே தேடுதலுக்காகிவிட்டாய்

எங்களை எமதாக்கிட
இனியொரு 'ஆதி'
எங்கிருந்து வருவான் ???

அருண்
கிள்ளான்
மலேசியா

மக்கள் ஓசை இதழில் 'இது எங்கள் சுவடு' என்ற
வரலாற்றுத் தொடரை எழுதி, தொடர் முடிவுறும் முன்னே
மறைவெய்திய பெரியவர் மெ. அறிவானந்தன் நினைவாக ...
தொடர்

படிப்பகம்

www.padippakam.com

# கார்கில் கனவுகள்

பொதுவாக இருக்கின்ற பூமியைத் துண்டாடி
பொறுப்பற்ற மானிடர் சாதி யிங்கே
உதிரச் சேற்றுக்குள் உழல்கின்ற மனிதா
அழுகைச் சிறையில் அடைபட்ட தேனோ?

மண்மாதா மடிமீது விளையாடும் தோழர்காள்
மனைமக்கள் உமையெண்ணி மனம்படும் பாடுகள்
கண்மூடி நிலைகொள்ளும் நேரத்தில் உறவாடும்
கலையாத கனவுகள் கானலாய் போனதே



சிறைபட்டு வாழ்கின்ற சிந்தனை இல்லாத
செம்மறி யாடுக ளாயிங்கு வாழ்வோர்
முறைகெட்டு மதியற்ற செயல்கள் செய்வோர்
மனிதநேய மில்லாத மூதேவிக் கூட்டமே

சிறகுகள் இல்லாமல் சாதிக்க முடியாத
சாத்திரம் பேசியோர் கூட்ட மிங்கே
வறுமைக்கு வித்திட்டு வரம்புகள் மீறியே
வழக்காடு மன்றங்கள் நடத்துகின் றாரடி

தன்னுயிர் நீத்து தாய்நாட்டைக் காக்கும்
தன்னல மில்லா தகைசால் இளைஞர்
தன்மானம் பெரிதென நாளும் எண்ணியே
தடையெலாம் தகர்த்து தரணி காப்போர்


தன்னலம் கொண்டு தரணி ஆள்வோர்
திறமெலாம் தீயதோர் வழியில் சென்றால்
என்று தொலையும் எல்லைத் தொல்லை
என்றே பலரின் கேள்வியாகும்

கவிஞர் கே.வி. ஜனார்த்தனன்
காஞ்சிபுரம் உ
தமிழ் நாடு.

படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சோடு கனவுகள்
# சொல்லோடு நினைவுகள்



நினைவுகளின் வேதனைகள்
பசிகாகிய பஞ்சங்கள் ...

வெஞ்சிறைப் பிஞ்சுகள் ...

சொல்லி வைத்தோம்
சொத்துகளாய் ...

துன்பங்களும் துயரங்களும்
உங்களுக்குரியதல்ல ...

தோள் கொடுப்போம்
இயன்றால் உயிர் கொடுப்போம் ...
வெற்று வார்த்தைகளுக்குள்
புதைந்துப்போன மனங்கள்

உரிமையிலிருந்து வேறுபட்ட
உடைமைகள் ...

அன்னியமாகிப்போன
எங்களது எல்லாமும் ...

சிறைக்குள் அடைபட்ட
கொலைகள் ...
தழும்பாய் ஆங்காங்கே
தமிழர்களின் கல்லறைகள் ...

போதிமர நிழலில்
புத்தனின் சமாதி ...

காவிகளுக்கும் காக்கிகளுக்கும்
வேறுபாடில்லை

எல்லாளன் சங்கிலியன்
ஆண்ட தேசம் - இன்று
புல்லர்களின் கையில்

எங்களின் கனவுகளிலிருந்து
இன்னும் மீட்கப்படாத நினைவுகள்

பெரியவர் வண்ணை தெய்வம்
பிரான்சு.

படிப்பகம்

www.padippakam.com

## மௌனங்கள்



ஒலியின் மழையில்
சுருண்டுவிழும் காதுகள்

வீரியத் தேடலில்
விரிந்து சுருங்கும்
மூச்சுக்குழாய்

ஒருவேளை உயிர்ப்பிக்காய்
கோடி கோடியாய்
பாவமூட்டை சுமக்கும்
மானிடக்குஞ்சுகள் ...

இதென்ன
- எல்லாத்தையும் -
சுமந்து வாளாயிருக்கும்
மௌனங்கள் ...
அதன் தேடல் சுகத்தில்
மீண்டும் மௌனமாகும்
ஒலி ... ஒலி ... ஒலி ...

இதைத்தான் ஒருமுறை
எங்கப்பா சொன்னார் ...
' டேய் விலங்கயே
விழுங்கிய வாய்டா
நீ ஏமாந்துடாதே
அவனெல்லா மனசனில்ல்ல ...

இன்னும் என்
மௌனக் குகைக்குள்
வந்து வந்துப் போகும்
இந்தச் சாடல் ...

இன்னும் புதிதாய்
ஒலிகள் பிறந்தன
மனிதர்களும்தான்
ஆனால் ...
மௌனம் மட்டும்
மௌனமாய் நின்று
சிரிக்கும்

' எல்லாத்தையும்
தெரிஞ்ச நானே
சும்மாயிருக்கேன்
எதுவுமே தெரியாத நீ
ஆடறே '

என் தன்மானத் தேடல்
எங்கோ ஒடி மறையும்
- வெட்கப்பட்டு -

அருண்
கின்னான்
மலேசியா.

www.padippakam.com


## மனவட்டைத் துண்டுகள்

எந்த நிலத்திலாவது
புதைந்து கொள்ளலாமென்றால்
பிதுங்கித் துப்புகிறது
வாழ்க்கை

நாளும் காணிக்கை
செலுத்தியிருக்கிறபடியினால்
வட்டிக் குட்டியைக்
கழுத்தைப் பிடித்துக்
கேள் என்கிறது
கோயில் கடவுள்

தீவிரவாதத்தில்
தீப்பற்றிக் கொண்டபோதும்
பிணமேடுகள் எனைத்தான்
பூஜிக்கின்றன

என்ன செய்ய ?
தற்கொலை செய்தால்
என் கோழைத்தனவாய்க்கு
அவல் கிடைக்க .
நானே மெல்லப்படுவேன்



ஏ. தேவராசன்
ஜாசின்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# மூன்று கவிதைகள்

## நாற்காலி

வெளியைத் தாண்டும்
பதவி சபலங்களால்
இங்கு நாற்காலி ஏதுமில்லை
காலி ...

## மாதச்சம்பளம்

அரசியல்வாதிகளின்
தலைமையில் நடக்கும்
மர்மம் நிறைந்த
உள்ளூர் நாடகம் ...

## பல்கலைக்கழக மாணவர்கள்

கல்விக் கோவில் ஆர்ப்பாட்டம்
மாணவர் ஊர்வலம்
வாசலில் கழந்திய செருப்பாய்
சமுதாய சிந்தனைகள்

அந்தப் பையன்
மலேசிய தேசிய பல்கலைக்கழகம்
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com

# தண்ணீரின் எல்லை...

ஒட்டிவைக்கும்
தையல்காரனெங்கே

தையலை விஞ்சிய துளைகள்
எப்படியாவது பொத்துக்கொண்டு
ஊற்றிவிடும் நீர்த்துளி...

எதையும்
கிழித்து...வெட்டி...அறுத்து
ஏதாவதாகிவிடும் ஆற்றல்

ஒன்றிலிருந்து மற்றொன்றாய்
பின்னர் இன்னும் மாறி
மாறியதிலிருந்து மேலும் மாறி
இறுதியில் சொட்டாய்
உருண்டோடும்
நீர்த்துளி...
தன்னையும்
தன் ஆற்றலையும் மறந்து...

இலெட்சுமணன்
ஜோகூர்பாரு
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

## காகிதப் பூக்கள் ...



அம்மாக்கள்
மம்மியாகி
அவரவர் பெயர்களை
முதியோர் இல்லங்களில்
முன்பதிவு செய்வதற்கு
முயற்சிக்கும் அப்பாவிகள்

தன்னை வெறி பிடித்த
ஒரு கூட்டம்
தமிழ்த்தாயை
அம்மணமாக்கி பணம் பறிக்கு
ஆங்கிலப் பள்ளிகளில்

தொட்டில் பருவத்தில்
தலையேற்றி
"நர்சரி" கொட்டடிகளில்
குழந்தையை அடைத்துவிட்டால்
அமெரிக்க விமானம்
அவையுக்க ஏறுமென
பார்த்திருக்கும் பைத்தியங்கள்

பிஞ்சுமுகம் பார்த்து
பிள்ளைப் பருவத்தில்
பாசம் ஆசைகளை
பாதையில் ஒறுத்து
பெரிய படிப்பு என்று
கல்வி ஏடு வளர்த்து

தாய்மொழியை
குழந்தைகள்
வாய்வழி கேட்டாலே
தண்டித்த பெருமைபேசும்
தாய் தந்தை அவலங்கள்

மண்மானத்தோடு
தன்மானத்தையும்
தவறவிடும் அரசாங்கம்
வெட்கம்...வெட்கம்...

_நன்றி__நன்றி__நன்றி_
கல் ஓசை_ஜூலை 2001
முத்தண்ணன்

www.padippakam.com

"ரோபர்ட் புரூஸ்"
மன்னனின்
தொடர் தோல்வி

சிலந்தி தந்த பாடம்...

பின்பு அவன் கண்ட
வெற்றி...

கஜனியின் விடாமுயற்சி...

நெப்போலியன் மூன்றடி
உயரத்தை விஞ்சிய
வெற்றிக்கொடி...

ஆப்ரகன் இலிங்கன்
ஆளுமை...

தன்னைவிட பன்மடங்கு
எடை சுமக்கும்
எறும்பு...

ஊர்ந்து ஊர்ந்தே
கல்லைக் கரைக்கும்
உயிர்கள்...

கல்லாமலே கூடு கட்டும்
தூக்கணாங்குருவிகள்...

எக்கி எக்கியே
மிதித்துவிட வேண்டும்
நிலையை...
மனிதப்பாதங்களைச்
சுமக்கும் பெருமிதத்தில்
சங்ககால நிலவு...

ஒவ்வொன்றாய்
கோர்த்த நெய்யப்படும்
சேலைகளில்
கண்டு சிரிக்கும்
மானிட நரம்புகள்...

வீட்டையே சுமந்திடும்
நத்தைகள்...

கன்றினை விழுங்கும்
மலைப்பாம்புகள்...

இரும்பினை வெட்டும்
நீர்த்துளிகள்...

எல்லாமும் கண்டு
கேட்டு
செயலற்றவனாக
நான்...

சோமதேவன்
பகாங் மலேசியா



படிப்பகம்

www.padippakam.com

# மாயப் புணர்ச்சி

யார் இட்ட சாபம் இது ?
"உன் தோல் முழுவதும்
மனிதர்களைக் கோர்த்துக் கிடப்பாய்"
நேற்றுவரை எதுவும்
நிகழ்ந்துவிடவில்லை
சிறு நெளிவுகள்தாம்.

இனி பொறுக்கமுடியவில்லை
- ஆங்காங்கே
சில்லிட்டுப் போகுமென் தோல்
உள்ளிழுத்து அறைக்குள் நாற்காலிமேல்
நட்டு வைத்தப் பிணமாகக் கோர்த்திருக்கும்

தலைகள் மொய்த்த பண்டம்
அது என்ன ?
தட்டத் தட்ட வரிகள் வீழும்
சொற்களெல்லாம் மந்திரமாகும்
சொருகி வரும் பூக்களையும்

"இன்னமும் உன்னழகு முகம்
கன்னக் குழியோடு
கனிந்த சிரிப்போடு
என் கணினித் திரையில்"

அறுபட்ட உறவோ ?
நானறிவேன் உன் ஓட்டம்.

"அன்னம் அழிந்துப் போனதாம்
எல்லோரும் சொல்வர்
அதிசயம் எனக்கு
நிகழ்ந்ததுண்டு

என் சின்னக் குறைகள் நீக்கி
சிநேகிதம் மட்டும் அருந்தி
அன்னம் இருந்தது - கொஞ்ச
நாட்கள் முன்பு வரை

என் அன்னம் வரும்
அகம் மகிழ அன்னம் வரும்"

நம்பிக்கை முற்றவில்லை
சந்தமும் சிந்தவேணும்

"நெகிழ்ந்து போவேனடி
என் நெஞ்சம் நிறையுமடி
உயிரும் உருக்குமடி
கரைந்து போகுமடி கண்கள் - எனில்
நட்பு பெரிதடி

உலகம் சுருங்குதடி
என் உள்ளம் சிறுக்குமோடி ?
சருகாம் உருகுதடி மௌனம்
என்னுள் சலனங்கள் பெருகுதடி
-எனில்
நட்பு பெரிதடி"

ஆடியும் பாடியும் அசைந்து
கொடுக்கவில்லை
எதிர்த்திசையிலிருந்து ஒருவரியுமில்லை

"போன தீபாவளியன்று,

பூவொன்று வந்தது
பட்டாசு வெடித்தது
வாழ்த்தொன்று சொன்னது
தமிழ்மகள் தானென்றது

படிப்பகம்

www.padippakam.com

இணையத்திலிருந்து அருவிக்காக ...

25 ஜூலை 2000
மா.சிவஞானம்
உலகம்

# மாயைப் புணர்ச்சி.

மின்னஞ்சலில் மென்பொருள் துழாவி
அதிரடியாம் அலைவிரித்தாடி
என் நெஞ்சுள் உறவொன்றை நட்டது
மனம் முழுவதும் பூங்காயாகிப் போனது

மொட்டவிழ்த்து மலர்ந்தது
சட்டெனப் பேசியது –
மீண்டும்
மொட்டாகிக் காட்டியது–முடிவில்
வெட்டி எனைப் பிளந்தது

வெறும் விளையாட்டுத்தானென்றது"

எல்லாமும் நானறியேன்,
நானன்றி எதுவும் அசையாது
மீட்க வேண்டும் சிந்தையை
அன்றில் மீளவரிது
கேளாத காதுக்கும் கேட்டுவிடச்
சத்தமிட்டுச் சொன்னேன் :
"அம்மா இருடா,
எதிர்த் திசைப் பிணமும்
உன்னைப் போல் மீசை வைத்ததடா"

தாடிக்காரனும் சத்தமிட்டுச் சொன்னான் :
"அடியே, வெளியே பேய்க் காற்று
சாளரமெல்லாம் மூடு"

கனன்று போம் கானகத்துள் விரைந்தேன்
மரம் சிலிர்த்து மழை சொன்னது :
"பெய்த்தெறி
அயர்கள் மொய்த்தாங்கு பிணமாகட்டும்
மடிந்தாங்கு மக்கி எருவாகட்டும்
மகிழம்பூ இனி நமக்குத்தான்
தழை தழை என்று தழைத்து வருவோம்
தடை ஏதுமின்றி புணர்ந்து மகிழ்வோம்"

படிப்பகம்

www.padippakam.com

# பெ
# பெண்பெ
# பெ

தங்க நிறத்திலும் பெண்ணல்ல
தாழம்பூ வாசத்திலும் பெண்ணல்ல
வானத்தை அளக்கும் பெண்ணல்ல
வாழ்க்கைக்கேற்ற பெண் வேண்டும் ...

குடிசையில் வாழ்ந்திட பெண் வேண்டும் - தன்
குடும்பத்தைக் காத்திட பெண் வேண்டும்
வறுமையிலும் வாழ்ந்திட பெண் வேண்டும் - அவள்
பொறுமைக்கும் புகழாய் வாழ்ந்திட வேண்டும் ...

அன்புடன் வாழ்ந்திட பெண் வேண்டும் - அவள்
வருகையால் வாழ்வு உயர்ந்திட வேண்டும்
பண்போடு பழக பெண் வேண்டும் - அவள்
மலர் முகத்தால் வாழ்வு வளம்பெற வேண்டும் ...

நாகரிகப் பெண் வேண்டும் - அவளிடம்
நாணமும் கண்டிட வேண்டும்
வற்றாத அன்பு பெண் வேண்டும் - அவள்
என்றும் குற்றால அருவியாய் சிரித்திட வேண்டும் ...



கவிப்புயல் கவிராசு
வில்லுபுரம் தமிழ் நாடு.

படிப்பகம்

www.padippakam.com

# எங்கும் தமிழ்

எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
என்றே பறை சாற்றுவோம்
அன்றும் தமிழ் என்றும் தமிழ்
இன்றே அதை கூறுவோம்
எங்கும் தமிழ்

தமிழெங்கள் வாழ்வின் உயிரானதே
அமிழ்தென்னும் உணவாம் பயிரானதே
மலை போல் தமிழிங்கு உயர்வானதே
விலையேது பாரிசாத மலரானதே
எங்கும் தமிழ்

பாரதி கண்ட கனவல்லவோ
பாரதிதாசன் நினைவல்லவோ
அவர்தம் கனவை நனவாக்குவோம்
அதையே எங்கள் மூச்சாக்குவோம்
எங்கும் தமிழ்

காசி ஆனந்தன் கவி பாடினான்
புதுவையும் தமிழன் புகழ் பாடியான்
ஈழத்துப் பரணி இவர் பாடவே
தமிழ் கூறும் நல்லுலகம் வளைந்தாடுமே
எங்கும் தமிழ்

முக்கலையும் ஒளிரும் தமிழோடுதான்
மூவுலகும் மிளிரும் மொழியோடுதான்
இயல் இசை நாடகம் அரங்கேறுதே
குயிலிசைக் குரலோடு இனிதாகவே
எங்கும் தமிழ்

கலைமகள் பிறந்ததும் எமக்காகத்தான்
மறையாது காப்பதும் எம் கடமைதான்
கலை என்றும் காலத்தின் கண்ணாடியே
அது போயின் காலடி மண்ணாகுமே
எங்கும் தமிழ்

தைப்பொங்கல் தமிழரின் புது வருடமே
முறையோடு தமிழினம் கொண்டாடுமே
தமிழன் திருநாட்கள் கொண்டாடுவோம்
முறைகெட்டு வந்தன துண்டாடுவோம்
எங்கும் தமிழ்

கருணையூர் நந்தி
( [illegible] )

www.padippakam.com

# மழை பார்...பார் மழை

மழை பார்
மழை பார்

சின்னப் புள்ளி வைத்து
சித்திரம் வரையும் புடவையில்
அதற்கு மேல் அனுமதித்தாலோ
நெற்பயிர் நனைத்துவிட்டு
மேனி வருடும் மையாளில்

மெல்லப் பதுங்கி வரும்
மேனிக்குப் பூ ஒத்தடம் தரும்
வெள்ளைக்காரன் போல்
மண்வாசம் தந்து வியாபாரம் பேசும்
பின் சட்டென எல்லோரையும் சிறையிலடைத்துவிட்டு
'ஜோர்'ஜை எகத்தாளம் போடும்

பொல்லாங்கு வேண்டாம் இனி மழையிடத்தில்
காட்டில் (GATT) கையெழுத்து போட்டுவிட்டதாம்
தான் தழுவ மட்டுந்தான்
தளிர் பச்சை மரங்களை வளர்த்தெடுக்குமாம்
மீதி நீர் தொட்டாலோ
வெள்ளிக் கம்பி வீசி வேரோடு சாய்த்துவிடுமாம்
நீர் புழங்கும் நிலத்தை நீரகப் படுத்துமாம்
அல்லது
பசலை நோய் பரணியெங்கும் பரப்பிவிட்டு
பழலை, வைத்தீஸ்வரனின் வார்த்தைகளில்
போய் ஒட்டிக்கொள்ளுமாம்
பொல்லாத
மழை பார்
மழை பார்.

இணைத்திலிருந்து......
மா.சிவஞானம்
உலகம்.

படிப்பகம்

www.padippakam.com

# அவள் காற்று



சொற்களை விரட்டி
கொப்பளித்து துப்பும்
கரும்விழிக் கடல் ...

கரையோர மரங்களில்
கால் பட்டும் படாமலும் தாவி
மலரும் பூக்களைக் கிறக்குத்தி
உறவில் கலந்து
ஊடுருவும் தேனீ ...

தண்ணீர் தேடும் வறண்ட நாவில்
எச்சில் துப்பி
உயிரை உசுப்பி
மனதுக்கு உப்பாகி
என்றும் இறையாகும்
நிலாவின் விருந்தாளியாய்
சூழ் கொண்ட மேகம் ...

ஏ. தேவராஜுலு
பினாங்கு
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com

நிலவைக் கேளாது பாப்பா நீ
பொருந்திருக்க லாகாது பாப்பா

_துப்பாக்கிகாரனின்
புல்லாங்குழல் பாடல்கள்.

பழமலய்யின் கவிதை வரிகள்



ஊர் மறந்தது புத்தரை
நான் நினைத்துப் போனேன்
அம்பேத்கார் காலனி

_சனங்களின் கதை

வெறும் இலைகள் :
கேட்டதில்லை நீங்கள்
நிறங்கள் வழங்கும்
இன்னிசை நிகழ்ச்சி

_குரோட்டன்களோடு
கொஞ்ச நேரம்

விழிப்பு என்பது
விழித்திருப்பது அல்ல
இருளில் இல்லாமல் இருப்பது

_இவர்கள் வாழ்ந்தது

வாடகை வீட்டில்
இழந்த காலத்தை
வாழ முடியாது
சொந்த வீட்டில்

_சொந்த வீடு

ஒவ்வொரும் நேரெதிரே
அவன் நடந்து செல்வான்
உட்கார்ந்து நகருமனால்
ஊர்ப்பேரைக் கேட்பான்

_பாளைவாரி ஓடைக்கரையில்


படிப்பகம்

www.padippakam.com

## பழைய மேகமும் புதிய மழையும்...

சூரிய விரல்களின் கிரணக் கம்பிகள்
பழுக்கக் காய்ந்து நின்று வந்தாலு
காயம் பட்டது கிடையாது
வையகக் குழந்தை

மேக பதியிடம் மது மழை தளும்பினாலு
உறவு முறிவுகள் செய்தது கிடையாது
நிலச் சகதி.



காற்றின் கன்னத்தை அறையும்...
பறவைகளின் சிறகுகளை
பிய்த்துப் போட்டதில்லை
வானத்து வெள்ள

கடவுக்கு ஓடா
சோம்பேறி ஓடைகள் கோடை உக்கி
தடயம் தொலைகின்றன.

விதை நிதிகள் மண் சிறைக்குள் முடங்குவது
மண்ணும் மன்னிப்பதில்லை

நூற்றாண்டுப் படிகளில் முடத் தடயங்கள்...

பரவாயில்லை...
பரவாயில்லை...
பரவாயில்லை...

வெட்டிவிட்டு
முடமாகவே நடப்போம்...

ஏ. தேவராசன்
ஜாசின்
மலேசியா

www.padippakam.com




# தமிழ் நாட்டில் ...

தமிழன் இல்லை தமிழன் இல்லை
தமிழ் நாட்டில்
தமிழும் இல்லை தமிழும் இல்லை
தமிழ் நாட்டில்
தமிழர் வாயில் தமிழே இல்லை
தமிழ் நாட்டில்
தமிழர் கல்வி தமிழாய் இல்லை
தமிழ் நாட்டில்
தமிழர் வாழ்வு தவிடாய்ப் போகும்
தமிழ் நாட்டில்
தமிழர் இளமை மறைந்து போகும்
தமிழ் நாட்டில்
தமிழின் இனிமை புதைபொருளாகும்
தமிழ் நாட்டில்.

முனைவர் தமிழப்பனார்
சென்னை
தமிழ் நாடு.

படிப்பகம்

www.padippakam.com



விஞ்ஞானியின்
புதுக்கவிதை
கணிப்பொறி ____

கடவுளிடம் காத்திட
வேண்டி திரும்பினான்
காணவில்லை காலணியை ____

விபத்தில் மரணம்
பொருத்தம் பார்த்து
முடித்த மாப்பிள்ளைக்கு ____

தாய்ப்பாலைப் பழித்து
புட்டிப்பாலை புகழ்வர்
ஆங்கிலப்பள்ளியாளர் ____

வீரத்தில் சிங்கம்
வேகத்தில் சிறுத்தை
எப்போது மனிதனாவாய் ____

பசியோடு காத்திருந்தான்
பிணத்தின் வருகைக்காய்
வெட்டியான் ____

உழவன் எழுதிய
உன்னதக் கவிதை
நெல்மணி ____

குழந்தையைக் காப்பாற்றுங்கள்
தொலைக்காட்சி
அரக்கனிடமிருந்து ____

கவிஞர் இரா. இரவி
மதுரை
தமிழ் நாடு

படிப்பகம்

www.padippakam.com

## காதல் செய்யத் தடை...

உடுக்கு போன்ற இடையப்பா
உளுந்தில் செய்த வடையப்பா
பாம்பு போன்ற சடையப்பா
பதற வைக்கும் உடையப்பா
வாழை போன்ற தொடையப்பா
வண்ணத் தாமரை குடையப்பா
மயிலைப் போன்ற நடையப்பா
மயக்க மருந்து கடையப்பா
கண்கள் காதல் மடையப்பா
காது தேனின் அடையப்பா
காட்டு யானைப் படையப்பா
காதல் செய்யத் தடையப்பா



## கலைவாணர் மதுரம்

தாயக் கட்டம் சதுரம்
சதுரங்கக் கட்டம் சதுரம்
காந்தித் தாத்தா
அஞ்சல் தலையும் சதுரம்
தரையில் பதிக்கும்
கற்கள் கூட சதுரம்
தேங்காய் இனிப்பு சதுரம்
சிரிக்க வைப்பார்
கலைவாணர் மதுரம்.

முனைவர் தமிழப்பன்
சென்னை
தமிழ் நாடு.

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சி....

யார் ஆண்டால் என்னவென்று
அயர்ந்துறங்கி இருந்த எம்மை
யாராள வேண்டுமென எண்ணவைத்து
பாராளும் சிங்கத்தின் கொடிய
தானாளும் எண்ணமதைத் தானுடைத்து
சீராளும் தமிழர் பின்னே
செல்ல வைத்தாய் ...



வேலிக்கும் எல்லைக்கும்
விளைநிலத்து வரம்புக்கும்
கோடேறி நின்ற எங்கள்
மறவர்...
ஆண்டாண்டாய் வாழ்ந்த
எங்கள் மண்ணை

மீட்டெடுக்க வந்த
எங்கள் உயிரே
வாழி நீ ...

வேலணையூர் பொன்னண்ணா
செர்மனி

படிப்பகம்

www.padippakam.com

# கத்தும் கடலிடை
# பொங்கும் புலிப்படை...

## 1

எழு...தோள் கொடு
செத்தும் வித்துடன் தன்னில்
பலநூறு செழிப்புகள்
வளரும் ...வளரும்

எம்மில்
எரியும் கோப நெருப்புகள்
சிங்கள தேசத்தின் உண்மை
நம் வீரர் கதை பேசும்
அதுவே அவர்கள்
திண்ணைப்பேச்சுமாகும் ...

நீயும் எழுக
புதிய பரணி பாடுக ...

சின்னச்சிட்டாய் சிறகு விரித்ததுதான்
இங்கு -
தவளைப்பாய்ச்சலாய் மாறி இப்போ
புலிப்பாய்ச்சலானது பார் ...

என்றும் ஓய்வதில்லை
ஓயாத அலை ...

வீழ்வதும் எழுவதற்கே
புலிகளும் எழுந்தன
எழுச்சியுடன் ...



படிப்பகம்

www.padippakam.com

உ

ஈழம் நமதே
தாரக மந்திரம்
தலைவன் தந்தது
திலீபனை தந்தது
கிட்டப்பனை ... என் அப்பனை
சொர்க்கத்தில் ஏந்நியது
இனியும் தாமதமேன் ?வெந்நி நமதே

எதிரியின் கடை எரியும் ...எரியும்
மக்களின் வெந்நி முரசில்
பால் மழை பொழியட்டும்

அள்ளிக்கொடு ...
புலிகள் வருவர்
ஆயிரம் வெந்நிகளுடன்

வீரத்தின் விளைநிலத்தின்
அறுவடையில்
நீயும் பங்குகொள்
தோள் கொடுப்போம் -இன்நேல்
உயிர் கொடுப்போம்...

என் தேசமே ...
கிராமத்து மண்ணில்
இன்று புதிதாய்
விடிவெள்ளி ...
நானும் என் பிள்ளையும்
புலிக்கொடியை ஏந்தி...

- ஆனையிரவு வீழ்ந்த
சேதி கேட்டு.
௨௨.௦௪.௨௦௦௦ பிந்பகல்
௦௨.௨௦ ( இலண்டன்)

முல்லை அமுதன்
இலண்டன்



படிப்பகம்

www.padippakam.com

# பூட்டும் பேனாவும்

வாழ்கின்ற காலத்தில்
என்னுடன் இருந்தவர்கள்
வாய்ப்பூட்டைத் தந்தார்கள்
பேச்செருக்கும் போதெல்லாம்
பூட்டப்படுவேன் ...

ஒலிப்பெருக்கி முன்
என் அதரங்கள் உருகும்போது
என் குரல்வளை வெட்டப்படும்

வாய்
வாய் பிளக்க
வாய்ப்பிழந்ததால்
கொஞ்சம் ஆடின
விரல்களின் சதைகள் ...

பேனா விரல்களின்
வாய்கள் ...
முனைகளைப் போலவே
புரைகளைக் குத்திக் கரைக்கின்றன
வலிக்கத்தான் செய்யும்
இந்த மருத்துவம்

ஏ.தேவராசன்
ஜாசின்
மலேசியா

படிப்பகம்